**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு,</u>**

**<u>திருவண்ணாமலை மாவட்டம்.</u>**

**<u>அசல் வழக்கு எண்.54/16</u>**

2023-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 12-ம் நாள் வாதி/பிரதிவாதி சாட்சியாகிய திரு.மாரிமுத்து, என்பவரின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 54-வது விதியின் 9-வது பிரிவின்படி திரு.எஸ்.உதயகுமார், உதவியாளர் என்பவரால் உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் | - திரு.மாரிமுத்து. |
| வயது | - |
| தந்தை/கணவர் பெயர் | - த.பெ.பொன்னுசாமி |
| கிராமம் | - வயலூர் |
| வட்டம் | - |
| சாதி | - |
| சமயம் | - |
| தொழில் | - |

<u>12.04.2023</u>

**<u>வா.சா.2.</u>**

**<u>11, 12 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

வசந்தி என்பவர் இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளார். அவர் மட்டும்தான் வழக்கு தாக்கல் செய்துள்ளார். வேறு யாரும் அவருடன் சேர்ந்து வழக்கு தாக்கல் செய்யவில்லை. மலர்மண்ணன், சந்திரசேகர், சிலம்பரசன் ஆகியோர்கள் யார் என்று எனக்கு தெரியும். என் அண்ணன் மகன்கள். என் அண்ணன் பெயர் குப்பன். சித்தப்பா மகன்தான் குப்பன். என் சித்தப்பா பெயர் அய்யாதுரை. அய்யாதுரை உடன் பிறந்தவர் யாரும் இல்லை. வயலூருக்கும் அழிவிடைதாங்கிக்கும் 1 1/2 கிலோ மீட்டர் தூரம். மேற்படி அழிவிடைதாங்கி கிராமத்தில் இருக்கும் சொத்து குறித்த விவரம் எனக்கு தெரியும். குப்பன் எனது சித்தப்பா மகன் என்று நான் இவ்வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

2) எனக்கு குப்பனை தெரியாது என்றும் இந்த வழக்கிற்காக அவரை தெரியும் என்று பொய்சாட்சி அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. குப்பனுக்கு 35 வருடத்திற்கு முன்பு திருமணம் நடந்தது. குப்பனின் மனைவி பெயர் வசந்தா. சுமார் 10 வருடத்திற்கு முன்பு குப்பன் கிளாருக்கு சென்றுவிட்டார். பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் மேற்படி சாட்சியானவரிடம் குப்பன் கிளாருக்கு சென்ற விவரம் குறித்து மட்டும்தான் கேள்வி கேட்டதாகவும் ஆனால் சாட்சி அதன் பிறகு சொல்லும் சங்கதிகளை தட்டச்சு செய்ய தேவையில்லையென்று கூறினார். மேற்படி வழக்கறிஞர் கேட்ட கேள்விக்கு சாட்சி அளித்த பதில் பதிவு செய்யப்படுகிறது. குப்பனுக்கு 2 மனைவிகள். முதல்தாரம் செல்வி. வசந்தாவிற்கும், குப்பனுக்கும் 3 குழந்தைகள் அழிவிடைதாங்கி கிராமத்திலேயே பிறந்தார்கள். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை படித்து பார்த்தேன். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் 2ம் வாதி பிறந்து கை குழந்தையாக இருந்தபோது கிளாருக்கு சென்று விட்டதாக என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் குப்பனுக்கு 3 குழந்தை பிறந்த பிறகுதான் கிளாருக்கு சென்றார்கள் அதுதான் சரி. குப்பன் 15 வருடங்களுக்கு முன்பு அழிவிடைதாங்கி கிராமத்திலேயே இறந்துவிட்டார்.

3) குப்பன் 10 வருடங்களுக்கு முன்பு கிளாருக்கு சென்றதாக சாட்சியம் அளித்துவிட்டு தற்போது 15 வருடங்களுக்கு முன்பாக இறந்துவிட்டதாக நான் சாட்சியம் அளிக்கிறேன் இதில் எது உண்மை என்று கேட்டால் எனக்கு சரியாக நினைவு இல்லை 8, 10 வருடங்களுக்கு முன்பு இறந்து இருக்கலாம். குப்பனின் முதல் மனைவி பெயர் செல்வி அவர் இறந்து 30 வருடங்களுக்கு மேல் ஆகியிருக்கும். அவர் வயலூரிலேயே இறந்துவிட்டார். அவர் இறந்தது குறித்து இறப்பு சான்றிதழ் உள்ளது.

குப்பனின் முதல் மனைவி பெயர் செல்வி. அவர் அழிவிடைதாங்கி கிராமத்தில்தான் இறந்தார். 1ம் வாதிக்கும் குப்பனுக்கும் திருமணமான விவரம் எனக்கு தெரியும். எந்த தேதி மாதம் வருடம் திருமணமானது என்று எனக்கு தெரியாது.

கற்றறிந்த பிரதிவாதிகளின் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.